# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2483/02 - 2026 අප්‍රේල් මස 07 වැනි අඟහරුවාදා - 2026.04.07

*2483/02 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத்தொகுதி முகாமை சபைச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழான கட்டளை**

1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத்தொகுதி முகாமை சபைச் சட்டத்தின் பிரிவு 2 இன் (3) உப பிரிவின் கீழ், முகாமை சபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிகளும் கட்டிடங்களும், 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், முகாமை சபையின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டுமென, மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத்தொகுதி முகாமை சபை இத்தால் அறிவிக்கின்றது.

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத்தொகுதி முகாமை சபையின் கட்டளைப்படி,

**மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத்தொகுதி மார்ஷல்.**

கொழும்பு.
2026, ஏப்பிறல் 07.

**அட்டவணை**

மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தின், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், குருந்துவத்தை கிராம அலுவலர் பிரிவில், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ளதும், இலங்கை நில அளவையியல் திணைக்களத்தின் 2018.12.27 ஆம் திகதியிட்ட ஆரம்ப வரைபட இலக்கம் 9796 இல் துண்டு இலக்கம் 01 ஆகக் காட்டப்பட்டு, வரி மதிப்பீட்டு இலக்கம் 129 உடைய விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள முழு நிலப்பரப்பு கீழ்வருமாறு விவரிக்கப்படுகிறது:


1A - G 46593 - 04 (2026/04)



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***வடக்கு*** : விஜேராம மாவத்தை, வரி மதிப்பீட்டிலக்கம் 127 உடைய மாவட்டச் செயலாளர் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணியும், கொ.7784 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தின் துண்டு இலக்கம் 01;

***கிழக்கு*** : கொ.7784 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 மற்றும் பௌத்தாலோக மாவத்தை;

***தெற்கு*** : பௌத்தாலோக மாவத்தை மற்றும் விஜேராம மாவத்தை மற்றும்;

***மேற்கு*** : விஜேராம மாவத்தை மற்றும் அதே விஜேராம மாவத்தையில் வரிமதிப்பீட்டு இலக்கம் 127 உடைய மாவட்டச் செயலாளர் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள நிலம்,

எனும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள, 0.4999 ஹெக்டெயர் விஸ்தீரணமுடைய காணியும் அதற்குள் அமைந்துள்ள பிரதம நீதியரசரின் உத்தியோகபூர்வ இல்லம் உப்பட அதனகத்தேயுள்ள அனைத்தும் அடங்கும்.

EOG 04 - 0041

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது